செ.வெ.எண்.103 நாள்.06.03.2017

# விளம்பரச் செய்தி

படைவீரர்கள்/முன்னாள் படைவீரர்கள்/ போர் விதவையர்கள் (ம) விதவையர்களின் சார்ந்தோர்களுக்கு **Sol (GD) cat** பணிக்கு யூனிட் கெட்குவார்டர்ஸ், ஆர்ட்லரி சென்டர், நாசிக் மூலம் இராணுவத்தில் ஆட்சேர்ப்பு தமிழ்நாட்டை சேர்ந்தவர்களுக்கு 05.04.2017 அன்று நடைபெறுகிறது. இதில், படைவீரர்கள்/முன்னாள் படைவீரர்கள்/ போர் விதவையர்கள் (ம) விதவையர்களின் சார்ந்தோர்கள் மற்றும் இப்பிரிவு அல்லாதவராயின் விளையாட்டு வீரர்கள் மட்டும் கலந்துகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச கல்வித்தகுதி 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் 01.10.1996-க்கு பின்னரும் 31.03.2000-க்கு முன்னரும் பிறந்திருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. அசல் கல்விச்சான்றிதழ் மற்றும் 3 நகல்
2. அசல் NCC சான்றிதழ் A/B/C-யுடன் 2 நகல்
3. இருப்பிட சான்றிதழ்
4. ஜாதி சான்றிதழ்
5. நடத்தை சான்றிதழ்
6. பின்புறம் கையொப்பமிடப்பட்ட 10 புகைப்படம்
7. குடும்ப புகைப்படம் மற்றும் நடத்தை சான்று பின்புறம் ஒட்ட வேண்டும்
8. பரிந்துரைப்பவர்களின் (தந்தை /சகோதரர்) **Joint** புகைப்படம் -2
9. படைவிலகல் புத்தகம்
10. திருமணமாகாத நிலை சான்றிதழ்
11. **Executive Magistate Class I/II-ல்** மேலொப்பமிடப்பட்ட **Affidavit ரூ.10/- Non-Judical Satmp paper**
12. சார்ந்தோர் சான்று

மேற்கண்ட ஆவணங்களுடன் ஆட்சேர்ப்பு முகாமில் கலந்துகொள்ளவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து முன்னாள் படைவீரர்களின் சார்ந்தோர்கள் கலந்துகொண்டு பயனடைமாறும், மேலும் விவரங்களுக்கு காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவிஇயக்குநர் அலுவலகத்தை அணுகிடலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.